மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | STC 150/2022 |
| பெயர் | : | சுகன்யா (PW2) |
| க/பெ | : | ரமேஷ் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(A1 Anthonyraj, A2 Ashwinjonesranjith are present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of July 2022

<u>முதல் விசாரணை</u>

1) நான் ஓட்டப்பிடாரம் 40 வீடில் வசிக்கிறேன்.நான் வீட்டு குடித்தனம் செய்கிறேன். அசா 1 ரமேஷ் என் கணவர்.சாட்சி வள்ளியம்மாளை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும்.

2) 23.06.2018 அன்று மதியம் 2.15 மணிக்கு நானும் என் கணவரும் வீட்டில் மதியம் சாப்பிட்டுவிட்டு வெளியே வரவும் 1 வது எதிரி அந்தோனிராஜ் பைக்கில் வந்து என் கணவரிடம் சண்டை போட்டுக்கொண்டிருந்தார். 1 வது எதிரி அதிகமாக மது அருந்தியிருந்தார். 2 வது எதிரி வீட்டில் இருந்து ஓடி வந்து என் கணவரின் நெஞ்சில் குத்தினார். நான் எதற்காக இப்படி அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு உங்கள் நாய் எங்கள் வீட்டு பூனையை கடித்துவிட்டதாக சொன்னார்கள்.

3) நான் நாய் கடித்தற்கு எதற்கு என் கணவரை அடிக்கிறிர்கள் என்று கேட்டேன். அதற்கு 2 வது எதிரி செருப்பை கழட்டி அடித்துவிட்டார். உன்னால் என்ன செய்யமுடியும் நான் அப்படிதான் அடிப்பேன் என்று சொல்லிவிட்டு கெட்டவார்த்தைகளால் பேசினார்.2 வது எதிரி அம்மா மமற்றும் தங்கை வந்து தடுத்தபோதும் அவர்களையும் தட்டிவிட்டு மீண்டும் அடித்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) சம்பவ இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் இடையே நடந்து சென்றால் 20 நிமிடத்தில் சென்றடையும் தொலைவு. சண்டை முடிந்தவுடன் என் கணவர் காவல் நிலையம் சென்றாரா என்றால் இல்லை, நெஞ்சில் அடிபட்டதால் அவருக்கு படபடப்பாக இருந்தது. சிறுது நேரம் உட்கார வைத்துவிட்டு காவல் நிலையம் சென்றோம்.

2) 1மணிநேரம் கழித்து சென்றிருப்பாரா என்றால் இல்லை, அதற்குள்ளாகவே காவல்நிலையம் சென்றுவிட்டார். காவல்நிலையத்தில் இருந்து 1 மணி நேரத்தில் எதிரிகளை அழைத்து சென்றார்கள். அப்போது என் கணவர் காவல்நிலையத்தில்தான் இருந்தார். நான் காவல்நிலையம் செல்லவில்லை.

3) நான் காவல்நிலையம் செல்லாததால் அங்க என்ன நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் கணவர் யார் மீது புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால், காவல் நிலையத்தில் இருந்து வந்த பின்னர் என் கணவர் தெரிவித்தார்.

4) நான் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிகளின் வீட்டில் உள்ள பெண்களுக்கும் சிறுசிறு சண்டைகள் வரும் என்றாலும் அதனால் என் கணவர் எதிரிகளின் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றாலும் நான் அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.